# கோவிட்-19இனை எதிர்கொள்வதற்கான அரசின் நடவடிக்கைகள் பாலின பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும்

- *சர்வதேச ஜூரர்கள் ஆணையத்தின் பெண்களுக்கான நீதி அணுகல் பிரிவு (Women's Access to Justice Team of the International Commission of Jurists)*

கோவிட் - 19 தொற்றானது உலகம் முழுவதும் பரவுகின்ற நிலையில், பல அரசாங்கங்கள் இந் நவீன கொரோனா வைரஸின் பரவலைத் தடுப்பதற்காக பயணத் தடைகள், ஊரடங்குகள் பாடசாலை, பணியிடங்கள் மற்றும் எல்லை மூடுதல்கள் உள்ளடங்கலான வெவ்வேறு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளன. இத் தொற்றின் போது அனைத்து மக்களினது ஆரோக்கியத்திற்கான உரிமைகளைப் பாதுகாப்பதற்காப்பதில் அரசுகள் தீர்க்கமாக செயற்படுவது அவசியமாக இருந்தாலும், அவர்கள் அத்தகைய நடவடிக்கைகளை மனித உரிமைகளுக்கு இணக்கமான முறையில் செய்வதும் முக்கியமாகும். அதாவது, சமமான பாதுகாப்பு மற்றும் பாரபட்சமின்மையினை நிலைநாட்டுகின்ற வகையில் செயற்படுவது அவசியம். இக் கொள்கைகளுடன் இணங்குதலானது பாலின தாக்கங்களை கணக்கிலெடுத்து குறிப்பிட்ட பாலின தேவைகளை விளங்கி முன்னெடுப்புக்களை மேற்கொள்ளுதலாகும்.

எவ்வாறாயினும், வைரஸின் பரவலைத் தடுப்பதற்கு தற்போது முயற்சிக்கும் அரசாங்கங்கள் மேற்கொண்டுள்ள பல நடவடிக்கைகள், ஏற்கனவே இருக்கும் பாலின ஏற்றத் தாழ்வுகளை அதிகரிக்கும் வகையில் இருப்பதனால், இவ்வாறான சூழ்நிலைகளில் பெண்கள் அவர்களது சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கு தடையாகவுள்ளது. ஊனமுற்ற, அகதிகளாக்கப்பட்ட, புலம்பெயர்ந்த, சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள, வறுமையில் வாழ்கின்ற மற்றும் இன, மத அல்லது பாலின சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்த பல பெண்கள் இத்தகைய நெருக்கடியான காலத்தில் மேலும் ஓரங்கட்டப்பட்டு, ஒன்றுடன் ஒன்று பின்னப்படப்பட்ட பாரபட்சங்களை (intersecting discrimination)' அனுபவிக்கின்றனர்.

## **#StayHome வீட்டில் இருக்குமாரு பணிப்பது பெண்களை எவ்வாறு பாதிக்கின்றது?**

இத் தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்டுள்ள ஊரடங்குகள், தனிமைப்படுத்தல்கள் மற்றும் பாடசாலை மூடுதல்களானவை பெண்கள் மீது மாறுபட்ட தாக்கத்தைக் கொண்டுள்ளது. பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் குடும்பங்களை கவனித்துக்கொள்ள வேண்டுமென்ற எதிர்பார்ப்பு இருப்பதனால், அவர்களுக்கு இவ்வாறான வேளைகளில், வேலை செய்வதற்கான நேரமும் வாய்ப்புக்களும் குறைந்த அளவிலேயே கிடைக்கினறன. இதனால் சுய அபிவிருத்திக்கான அவர்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இப் பேரிடரின் போது அவர்களை உடல் மற்றும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்ததும் ஓர் கணவருடன் தனிமைப்படுத்தப்பட்டிருப்பின் அவர்கள் மணவாளர் வன்முறை (intimate partner violence) மேலும் அதிகமாக அல்லது தீவிரமாக எதிர்கொள்வதற்கான ஆபத்துக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இத் தொற்று நோய்க் காலத்தில் வீட்டில் வன்முறைகள் இடம்பெறுகின்ற போது காவல்துறையை தொடர்பு கொள்வது, மருத்துவ உதவி அணுகுவது, உளவியல் ஆதரவு, அல்லது பாதுகாப்பான தங்குமிடங்களை அணுகுவதினை பற்றி வழிகாட்டுதல்கள் அல்லது தகவல் கணிசமாக குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. உதாரணமாக, ஐக்கிய இராச்சியத்தில், வீட்டு வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகின்ற 25 தாபனங்கள் கோவிட்-19 தொற்று எழுச்சியிலிருந்து தங்கள் வழக்குகள் அதிகரித்துள்ளதாக குறிப்பிடுவதுடன், அதில் கால்வாசியினரை தொழில்நுட்ப சிக்கல்கள், பாதிக்கப்பட்டவர்களை சந்திக்க இயலாமை மற்றும் ஊழியர்களின் சுகயீனம் போன்ற காரணங்களால் பாதிக்கப்பட்டவர்களை வினைத்திறனாக ஆதரிக்க முடியவில்லை என குறிப்பிட்டனர்.

மேலும், வைரஸ் பரவலை எதிர்த்துப் போராடுவதில் வளங்கள் முடக்கப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே எதிர்மறையான சட்டங்களினாலும் சம்பிரதாயங்களினாலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ள பெண்களுக்கான பாலியல் மற்றும் இனப் பெருக்க சுகாதார சேவைகளை முன்னுரிமைபடுத்தப்படமாட்டாது என்பதே யதார்தம். இது மாதவிடாய் ஆரோக்கியம், தாய்மை ஆரோக்கியம் அடங்கலான பெண்களின் உரிமைகளின் மீது கணிசமான அளவு மட்டுப்பாடுகளை ஏற்படுத்துகிறது.

## வேலைபுரியும் பெண்களுக்குள்ள சிக்கல்கள்

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO/ஐ.எல்.ஓ) கருத்தின்படி, பெண்கள் வைரஸின் பரவலைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் அதிகம் பாதிக்கப்பட்ட துறைகளில் (உதாரணமாக சேவைத் துறையில் 58.6 வீதம்) அல்லது வைரஸ் தொற்றினைக் கையாள்வதில் முன்னணியில் இருக்கும் தொழில்களில் அளவுக்கதிகம் வேலை செய்கின்றனர். இப் பேரிடரின் போது இரு துறையை சேர்ந்தோரும் பொருளாதார ரீதியாக அல்லது சுகாதார ரீதியாக நேரடியாய் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் கோவிட் - 19 நெருக்கடியினால் பாரிய அளவிலான பயணக் கட்டுப்பாடுகள் இருக்கும் நாடுகளில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள் அவர்களது வேலையிடங்களை அணுக முடியாமை அல்லது

அவர்களது குடும்பங்களுள்ள நாடுகளுக்குத் திரும்ப முடியாமை போன்ற சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

**ஆகதியான அல்லது புகலிடம் கோரும் பெண்களின் நிலை**

அகதி முகாம்கள் மற்றும் தற்காலிக குடியேற்றங்களில் பாதுகாப்பான உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளின் கடுமையான பற்றாக்குறை காணப்படுகின்றது. தொற்றின் காரணமாக நீதிமன்றங்கள் மூடப்பட்டால் தற்போது புகலிடம் கோருவோர் நீண்ட காலம் காத்திருக்க நேரிடும் என்பதுடன், தங்கள் உரிமைக் கோரல்கலைத் தொடர வாய்ப்பில்லாமல் சில நேரங்களில் (திருப்பி அனுப்பாமை கொள்கையை மீறி) அவர்களது தாய் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படலாம். இவ் வைரஸானது நெரிசலான இடப்பெயர்வு தளங்களை இலகுவாய் தாக்குவதால், இதன் விளைவுகள் பேரழிவு தரும் என எதிர்பார்க்க முடியும். மேலும், இந்த கட்டமைப்பில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் திறந்தவெளியில் கழிவகற்ற அல்லது பகிரப்பட்ட துப்புரவு வசதிகளை நாடிச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்ற போது பாலியல் வன்முறைகள் மற்றும் சுரண்டலுக்கு ஆளாகின்றனர் என ஆய்வுகள் கண்டறிந்துள்ளன.

***கோவிட் - 19 தொடர்பான அரசின் அனைத்து நடவடிக்கைகளும் பாலின பொறுப்புடையதாயிருத்தல் வேண்டும்***

பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் (ICESCR) கீழ், அனைவரும் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தின் அதி உயர்ந்த தரத்தை அனுபவிப்பதற்கு அவர்களுக்கு உள்ள உரிமையை முழுமையாக உணர்ந்து செயற்பட வழியமைக்க வேண்டிய கடமை அரசுகளுக்கு உண்டு. மேலும் பெண்களுக்கு எதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் வெளியேற்றுவதற்கான சமவாயமானது (CEDAW) சுகாதாரத் துறையில் பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தை வெளியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், ஆண்கள் மற்றும் பெண்கள் சமத்துவ அடிப்படையில் சுகாதார சேவைகளை அணுகுவதனை உறுதிசெய்யும் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் கடப்பாட்டினை அரசுகளுக்கு வழங்குகின்றது.

மேலும், பேரிடரின் போது பாலின மாறுபாடுகளை அங்கீகரிக்கத் தவறுகின்றமையானது எடுக்கப்படும் முயற்சிகளின் செயற்திறனைக் கட்டுப்படுத்துவதுடன் அதன் விளைவாக பெண்களின் உரிமைகளுக்கு இடையூறு ஏற்படுத்துகின்றது. கோவிட்-19 போன்ற நோய் பேரிடர்களின் போது பொறுப்பாயிருக்கும் வகையில், பாலின மற்றும் சுகாதார ஏற்றத்தாழ்வுகளை மீளாக்கம் செய்யாதிருக்க அல்லது நிலைநிறுத்தாதிருப்பதற்காக, தொற்றினை எதிர்கொள்வதற்கு தாபிக்கப்பட்டுள்ள அனைத்து சமூக-கலாசார நடவடிக்கைகளிலும் பாலின விதிமுறைகள் மற்றும் வகிபங்குகள் அடையாளங் காணப்பட்டு உள்ளடக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். மேலும், அவசரகால தயார்நிலை மற்றும் பொறுப்புத் திட்டம் (emergency preparedness and response plan) என்பவை பாலின வகிபங்குகள், பொறுப்புடைமைகள், சமூக விதிமுறைகள் மற்றும் பெண்களின் குறிப்பிட்ட தேவைகளை அடையாளப்படுத்துதல் வேண்டும். வீடுகளில் முடக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் பாதுகாக்கப்படுவதற்கான புதிய உத்திகளையும் அரசுகள் வழங்க வேண்டும். குடும்ப வன்முறை நிபுணர்களின் வேலையை அரசாங்கங்கள் அத்தியாவசிய சேவையாக உள்ளடக்க வேண்டும் என்பதுடன் அச் சேவைகளை வழங்கும் அமைப்புகளுக்கு அவர்களது சேவைகக்கான அதிக கேள்விக்கு அவர்கள் பதிலளிக்க உதவும் வகையில் அவசரகால வளங்களை வழங்க வேண்டும். வீட்டு வன்முறை தொடர்பில் புகாரளிப்பதற்கு பெண்களை ஊக்குவிப்பதற்காக, "Pop-up/mobilė" அதாவது நடமாடும் ஆலோசனை மையங்கள் மற்றும் மருந்தகங்கள் போன்ற மாற்று வழிகளையும் அவர்கள் கருத்திற் கொள்ள வேண்டும்.

பேரிடரை எதிர்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மனித உரிமை தராதரங்களுடன் இணங்குகின்ற வகையிலும் பாலின பொறுப்புடைமையுடன் இருப்பதையும் அரசாங்கங்கள் உறுதிசெய்தல் வேண்டும். பொது சுகாதார நெருக்கடியைச் சந்திக்க அரசுகள் சில உரிமைகளை மட்டுப்படுத்தலாம் என்ற போதிலும், அத்தகைய கட்டுப்பாடுகள் எப்போதும் சட்டபூர்வமான தன்மை, அவசியத்தன்மை, விகிதாசாரத் தன்மை மற்றும் பாரபட்சமற்ற தன்மை போன்ற கொள்கைகளுக்கு உட்பட்டுதல் அவசியமாகும்.

பெண்கள் பெரும்பாலும் முறைசாரா வேலையின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளில் காணப்படுவதால், (எடுத்துக்காட்டாக, வீட்டுப் பணியாளர்களாக அல்லது சுயதொழில், வீட்டை அடிப்படையாகக் கொண்ட வேலையாட்களாகக் காணப்படுவதால்) காப்பீடு செய்யப்படாத வேலையாட்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் உட்பட அனைவருக்கும் கூட்டாக நிதியளிக்கும் சுகாதார சேவைகளுக்கான உலகளாவிய அணுகுதலினை அதிகார சபைகள் மேம்படுத்தல் வேண்டும். நோய்வாய்ப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்ட அல்லது சிறுவர்கள், முதியோர் அல்லது ஏனைய குடும்ப உறுப்பினர்களைக் கவனித்துக் கொள்வோரின் வருவாய்ப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு ஊதியம் பெறும் நோய் விடுப்பு, நோய் சலுகைகள் மற்றும் பெற்றோர் அல்லது பராமரிப்பு விடுப்புக்கான அணுகுதலை அரசுகள் விரிவுபடுத்தல் வேண்டும்.

மேலும், அரசாங்கங்கள் புகலிடம் கோரும் பெண்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள நபர்கள் மற்றும் அகதிகள் கோவிட் - 19 தேசிய கண்காணிப்பு, தயார்நிலை மற்றும் பொறுப்புத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பதுடன் மாதவிடாய் சுகாதாரம், இனப்பெருக்க மற்றும் பிற ஆரம்ப சுகாதார பொருட்கள் நன்கு சேமித்து வைக்கப்பட்டிருப்பதையும் கிடைக்கப்பெறுவதையும் உறுதிசெய்தல் வேண்டும்.